# வான் கொண்ட ஆளுமை முரசொலி மாறன்!



நேற்றையத் தொடர்ச்சி

**அளித்திடு (Deliver): நம்பிக்கையின்மீது கட்டப்பட்ட வாய்ப்புகள்**

மாறனுக்கு, தாராளமயமாக்கல் என்பது வெறுமனே கதவுகளைத் திறந்துவிடுவது அல்ல; அது, உள்ளே வருபவர்களுக்கும், உள்ளே இருப்பவர்களுக்கும் இடையே ஒரு நியாயமான உறவை உருவாக்குவது. அவர் கூறினார்: "பன்னாட்டு நிறுவனங்கள் அவசியமான தீயவைதான் — ஏனெனில், அவை முதலீட்டையும் தொழில்நுட்பத்தையும் மேலாண்மை உத்திகளையும் கொண்டு வருகிறது. எனவே, அவற்றைப் பயத்துடன் அல்லாமல் தன்னம்பிக்கையோடு பார்க்க வேண்டும்" என்றே கூறிவந்தார்.

அந்தத் தன்னம்பிக்கையின் அடிப்படையில்தான் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தினார், மாறன். 2000ஆம் ஆண்டு, சீனாவின் ஷென்சென் நகரத்தின் எழுச்சியில், அவர் கண்டது ஒரு தொழில் புரட்சியை மட்டுமல்ல; `சாத்தியப்படுத்துதல்' (facilitation) என்ற ஒரு தத்துவத்தை. அந்தக் கற்றலே, இந்தியாவின் ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை (EPZ), சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக (SEZ) மாற்றியது. அது ஒரு சட்டத் திருத்தம் மட்டுமல்ல; அது ஒரு சிந்தனை மாற்றம். அதுவே, அடுத்த பத்தாண்டுகளில் பெரும் வளர்ச்சிக்கு வித்திட்டது.

அந்த நம்பிக்கையின் அடித்தளத்தில் இருந்தது ஒரு ஆழமான, திராவிடப் புரிதல் இருந்தது என்பது என் பார்வை அது என்னவெனில் உட்கட்டமைப்பு என்பது வெறும் சிமெண்ட் கான்கிரீட்டால் ஆனதல்ல. மேலும், தன்மானம் இல்லாத இடத்தில் முதலீடும் தற்காலிகமானதே.

இந்த மூன்று இசைவுகளான — கட்டுடை, காத்திடு, அளித்திடு — தனித்தனியான கொள்கைகள் அல்ல. அவை இணைந்து ஒரு தாள லயத்தை உருவாக்குகின்றன. அது, கண்மூடித்தனமான சந்தையின் ராகமல்ல; அது, சமூக நீதியையும் தனிநபர் திறனையும் ஒருங்கே கொண்டாடும் ஒரு திராவிட இசைவு.

இந்தச் சூழலில், சில கேள்விகள் நம் முன் எழுகின்றன:

இன்று, நமது நிர்வாகம் அமைப்பு `கட்டுடைப்பதில்' காட்டும் வேகத்தை, `காத்திடுவதிலும், அளித்திடுவதிலும்' காட்டுகிறதா?

நாம் சுதந்திரத்தின் வேகத்தைக் கொண்டாடுகிறோம். ஆனால், நீதியின் சமநிலையைத் தக்கவைத்துக் கொள்கிறோமா?

முரசொலி மாறன், திறந்துவிட்ட அந்தத் திறந்த வாசல்களை நாம் இன்னும் பெரிதாக்குகிறோமா — அல்லது, புதிய பெயர்களில், புதிய வடிவங்களில், இன்னொரு உரிம ராஜ்ஜியத்தை (License Raj) நமக்கே தெரியாமல் நாம் மீண்டும் கட்டிக்கொண்டிருக்கிறோமா?

இந்த மூன்று அசைவுகள் — கட்டுடை, காத்திடு, அளித்திடு — திராவிட யதார்த்தவாதத்தின் அடித்தளம் என்றால், இன்று நாம் ஒருபோதும் காணாத புயலை எதிர்கொள்கிறோம்.

உலகமயமாக்கலின் அலைகள் ஒருபக்கம், வளர்ந்த நாடுகளின் பாதுகாப்புவாத (protectionism) அலைகள் மறுபக்கம், நுகர்விலும் உற்பத்தியிலும் `மிதவியல்' (temperance) வலியுறுத்தும் சுற்றுச்சூழல் இயக்கங்களும், பழைய பொருளாதார நினைவுகளை (nostalgia) விற்பனை செய்யும் பழமைவாத குரல்களும் (conservative voices) — இவை அனைத்தும் ஒரே கடலில் மோதிக்கொண்டிருக்கின்றன.

அந்தச் சுழலில், நம் யதார்த்தவாதத்தை எவ்வாறு நிலைநிறுத்துவது?

அந்தக் கேள்விக்கான வழிகாட்டி, முரசொலி மாறனின் சிந்தனையின் ஒரு வடிவமான — C.O.M.P.E.T.E என்பது என் பார்வை. அது வெறும் பொருளாதாரச் சுருக்கப்பெயர் அல்ல; உலகமயமாக்கலுக்கான திராவிடக் கோட்பாடு.

4 C.O.M.P.E.T.E — உலகமயமாக்கலின் திராவிடக் கோட்பாடு

முரசொலி மாறன், உலகமயமாக்கலை வெறும் பொருளாதார நிகழ்வாகப் பார்க்கவில்லை. அவருக்கு, அது மனித மனநிலையின் மாற்றம் — திறந்த கதவுகளும், திறந்த எண்ணங்களும் தேவைப்படும் ஒரு புதிய ஒழுங்கு. ஆனால், திறந்த கதவுகள், நியாயமற்ற காற்றை உள்ளே அனுமதித்து, நமது அறத்தின் சுடரை அணைத்துவிடக் கூடாது. அந்தச் சமநிலையைப் பேணும் தத்துவம்தான், C.O.M.P.E.T.E.

இது ஒரு கொள்கை அட்டவணை அல்ல; இது, உலகமயமாக்கலை மனிதநேயத்தின் திசையுடன் இணைக்கும் ஒரு திராவிட செயல்பாடு.

**C — Competition with Safety Nets**
**(பாதுகாப்பு வலைகளுடன்கூடிய போட்டி)**

மாறனுக்கு, `போட்டி' என்பது எளியவரை அழிக்கும் தத்துவமல்ல; அது ஒவ்வொருவரையும் உயர்த்தும் ஒரு பரிசோதனை. உண்மையான சுதந்திரச் சந்தை என்பது அழிவின் ஆடுகளமல்ல; அது திறனின் உற்பத்திக் களம்.

அவர் வலியுறுத்தியது இதுதான்:

"Many of our industrialists want protection and appear to be against competition. This is what is called the third class railway mentality. Have you ever travelled third class? I have done so. People fight to enter the compartment. They shout at those who are inside to open the door. But the moment they enter, they close the door and shout, 'No more! No more!' This is exactly like that. Those who are already there want to prevent others from coming in. This mindset should change."

அந்தச் சிறிய உவமையில் — மாறன் ஒரு முழுப் பொருளாதாரத்தின் மனநிலையை வெளிப்படுத்தினார். `பாதுகாப்பு' என்ற பெயரில் சிலர், மற்றவர்களுக்கு வாய்ப்புகள் மூடப்பட வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் மாறனுக்கு, உண்மையான பாதுகாப்பு என்பது வாய்ப்பைத் தடுக்க அல்ல — வாய்ப்புக்கான வலை அமைக்க.

அதனால்தான் அவர் வலியுறுத்தினார்:

"Competitiveness is the only answer, and the world is cruel, and not compassionate. You simply have to compete, compete, compete."

இந்த வரிகள், ஒரு அரசியல்வாதியின் சொற்களல்ல — ஒரு நிஜவாதியின் (Realist) எச்சரிக்கை. உலகம் கருணையால் இயங்கவில்லை; திறனால் மட்டுமே இயங்குகிறது. ஆனால் திறனுடன் கூடிய அரசு, மனிதநேயத்தையும் மறக்கக் கூடாது. அதனால்தான் மாறன், "காலவரையறைக்குட்பட்ட ஆதரவு" (timebound support) என்ற கொள்கையை முன்னிறுத்தினார் — அது ஒரு retreat அல்ல; அது rehabilitation. ஒரு தலைமுறையைக் கைப்பிடித்து, நடைப்பயிற்சி செய்யவைக்கும் அரசின் தார்மீகப் பொறுப்பு அது.



எழுத்தாளர்
ஜெயன்நாதன் கருணாநிதி

**O — Openness with Reciprocity**
**(பதிலுதவி நிபந்தனையுடன்கூடிய திறந்த மனப்பான்மை)**

மாறனுக்கு, `திறந்த சந்தை' என்பது நிபந்தனையற்ற சரணாகதி அல்ல; சுயமரியாதையுடன் கூடிய பங்கீட்டின் தத்துவம். அவர் தெளிவாக எச்சரித்தார்:

"WTO has to recognize the existing development deficit ... The 'one size fits all' approach has clearly failed to deliver."

அதன் பொருள் தெளிவானது — திறந்த கதவுகள் இருக்கட்டும், ஆனால் ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரமும் அதன் சொந்த நிலைப்பாடுகளுக்குள் தன் பாதையை வகுக்கட்டும்.

அவர் வெளிநாட்டு முதலீட்டை வரவேற்றார்; ஆனால், சிந்தனை இல்லாத திறப்பு அல்ல — நியாயமான ஒத்துழைப்பு. அதனால்தான் அவர் கூறினார்:

"New issues or new agreements will obviously extract new prices and developing countries are hardly prepared for the same."

அவரின் பொருளாதாரக் கண்ணோட்டம்: திறந்த சந்தையில் ஈடுபடுவது நியாயம்தான். ஆனால், அது பரஸ்பர நன்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

அந்த நியாயத்தின் கோட்டைக் காப்பதற்காகவே அவர் நினைவூட்டினார்:

"WTO is not a global government and should not attempt to appropriate to itself what legitimately falls in the domain of national governments and Parliaments."

மாறனுக்கு அந்நிய முதலீடு என்பது உரிமையாளர் மாற்றம் அல்ல; அறிவு, தொழில்நுட்பம், மதிப்பு — இவை அனைத்தும் பகிரப்படும் கூட்டாண்மை. திறந்த கதவு கொள்கை அவசியம். ஆனால், திறந்த கையேந்தி நிற்கும் கொள்கை அல்ல.

**M — Moral Economy**
**(அறம் சார்ந்த பொருளாதாரம்)**

அவரது அசைக்க முடியாத நம்பிக்கை இதுதான்: அறம் இல்லாத வளர்ச்சி என்பது வெறும் வருமானத்தின் பெருக்கம்; அது ஆன்மாவின் இழப்பு. தோஹா ஒப்பந்தத்தில் எதிரொலித்த அவரது குரல், இந்தக் கோட்பாட்டின் உச்சம்: `பொது சுகாதாரம், காப்புரிமையைவிட மேலானது (Public Health is above Patent Rights)'. இது ஒரு சட்ட வரி அல்ல; இது ஒரு தத்துவத்தின் தொடக்கம். மாறனின் பொருளாதாரம், பங்குச்சந்தையின் ஏற்றத்தாழ்வுகளில் தொடங்கவில்லை; அது மனித உயிரின் விலைமதிப்பற்ற தன்மையிலிருந்து தொடங்கியது.

**P — Process and Fairness**
**(செயல்முறை மற்றும் நியாயம்)**

உலக வர்த்தக அமைப்பு போன்ற உலக மன்றங்களில், மாறன் விவாதத்தின் பொருளை மட்டும் கேள்வி கேட்கவில்லை; அந்த விவாதம் நடந்த முறையையே கேள்விக்குட்படுத்தினார். `பச்சை அறை' பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் நடத்தப்படும் இரகசிய ஒப்பந்தங்கள், நியாயத்தின் குரல்வளையை நெரிக்கும் கருவிகள் என்று அவர் எச்சரித்தார்.

அவர் கூறினார்:

"We are witnessing a situation where some players seem to be saying, 'we'll start the game and as we kick the ball around, we'll decide whether we play football or rugby'... This kind of interpretation is contrary to the spirit of the declarations and would definitely harm the interests of developing countries."

இந்த வரிகளில், அவர் உலக அரங்கின் இரட்டை அளவுகோலை மட்டும் அல்ல, அதன் விளையாட்டு விதிகளையே வெளிச்சமிட்டார். அவருக்கு, வெளிப்படைத்தன்மை என்பது ஒரு நிர்வாக வசதியல்ல; அது நீதியின் ஆன்மா.

தோஹா மாநாட்டில் நடந்த அனுபவம் அவரது எச்சரிக்கையை உண்மையாக்கியது:

"Even during discussions on the 13th and the entire night of 13-14 November, almost 38 hours of nonstop discussions, texts were appearing by the hour... Who prepared the avalanche of Draft after Draft? Why? We do not know."

அவர் சுட்டிக்காட்டிய அந்தக் கேள்வி — "Who prepared the avalanche of draft after draft?" — இன்னும் உலக மன்றங்களில் எதிரொலிக்கிறது.

"In the eleventh hour probably after 37 hrs. 45 minutes, they produced a Draft like a magician producing a rabbit out of his hat... The tactics seemed to be to produce a draft at the wee hours and force others to accept that or come nearer to that. Has it happened in any international conference? Definitely not."

அவரின் முடிவு எளிமையானதாய் இருந்தாலும் ஆழமானது:

"Any system which in the last minute forces many developing countries to accept texts in areas of crucial importance to them cannot be a fair system."

அந்த வரிகள் வெறும் புகார் அல்ல; ஒரு நியாயத்தின் வரையறை. மாறனின் கருத்தில், நியாயமற்ற செயல்முறைகளால் எழுதப்படும் எந்தச் சட்டமும் நீதியின் கருவியாக இருக்காது; அது அதிகாரத்தின் வணிகக் கருவியாகவே மாறும்.

**E — Equity First (சமத்துவமே முதலில்)**

அவருக்கு, பொருளாதாரம் என்பது எண்களின் ஆட்டமல்ல; அது மனித ஆற்றலின் அளவுகோல். சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs), பெண்கள், இளைஞர்கள் — இவர்கள் வெறும் பயனாளிகள் அல்ல; அவர்கள் வளர்ச்சியின் மையப் பங்காளிகள். அவர் அன்றே பேசிய `அனைவரையும் உள்ளடக்கிய போட்டித்திறன்' (inclusive competitiveness) மற்றும் போட்டியில் பின்தங்கியவர்களைக் (uncompetitive players) காப்பாற்றுவதற்குப் பதிலாக, அனைவரும் சமமாகப் போட்டியிடக்கூடிய வாய்ப்பை உருவாக்கும் (level playing field) அவசியம் என்பதே, இன்று உலகம் பேசும் `நீதியான மாற்றம்' (Just Transition) என்ற கருத்தின் திராவிட மூலம். அவர் தெளிவாக அறிந்திருந்தார் — சமத்துவம் இல்லாத திறன், திறனற்ற சமத்துவம் போலவே அபாயகரமானது.

**T — Technology for Inclusion**
**(அனைவரையும் உள்ளடக்கிய தொழில்நுட்பம்)**

மாறனுக்கு, தொழில்நுட்பம் என்பது வெறும் சந்தையின் கருவியல்ல; அது ஒரு சமூக நீதிச் சாதனம். `புதிய கண்டுபிடிப்புகள், இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்தக் கூடாது' என்று அவர் நம்பினார். சியாட்டில் மற்றும் தோஹா சுற்றங்களில், வளர்ந்துவரும் நாடுகள் தொழில்நுட்பத் திறன்கள் (technical capacity) இன்றி இருந்தால், தரநிலைகள் மற்றும் சான்றுகள், `மறைமுகப் பாதுகாப்புவாதமாக (disguised protectionism)' மாறும் அபாயம் இருப்பதாக அவர் எச்சரித்தார். அதனால்தான், அவர் தர ஆய்வகங்கள் (testing labs), தரநிலைச் சான்றுகள் (certification systems) மற்றும் சர்வதேச வணிகத்தில் நடைமுறை எளிமைப்படுத்தல்கள் (simplified customs and transparent documentation) ஆகியவற்றை வலியுறுத்தினார்.

அந்தக் கொள்கைத் தெளிவு, பின்னர் உருவான டிஜிட்டல் வணிகச் சாத்தியப்படுத்தல் (digital trade facilitation) என்ற உலகப் போக்குக்கே முன்னோட்டம் அளித்தது.

அவர் தொழில்நுட்பம் என்பது அதிகாரத்தின் கருவியாக அல்லாமல் சாத்தியப்படுத்தலின் கருவியாகவும் அது வணிகத்தின் கைக்கூலியாக அல்லாமல் சமூகத்தின் குரலாக இருக்க வேண்டும் என்று எண்ணினார் என்பதே என் பார்வை.

**E — Exports as Dignity (ஏற்றுமதியே தன்மானம்)**

மாறனின் பொருளாதாரக் கண்ணோட்டத்தில், ஏற்றுமதி என்பது வெறும் வர்த்தகச் செயல் அல்ல. அது ஒரு நாடு தன்னுடைய திறனை, தன்னம்பிக்கையுடன் உலகத்துக்கு வெளிப்படுத்தும் வழி. அவருக்கு, ஏற்றுமதி வளர்ச்சி (export growth) என்பது வருமானத்தின் கணக்கில் மட்டும் அல்ல; அது திறன், தரம், தன்னம்பிக்கை ஆகியவற்றின் பரீட்சை.

அவர் வலியுறுத்தியது — ஏற்றுமதிக்கான செயல்முறைகள் வேகமான, எளிமையான, வெளிப்படையான (speedy, simple and transparent) தாக இருக்க வேண்டும்; `அப்படியொரு அமைப்பு இருந்தால், ஒரு அனுபவமற்ற கிராமக் கலைஞருக்கும் சிரமமின்றி ஏற்றுமதி செய்ய முடியும்' என்று அவர் கூறியிருந்தார்.

அந்தக் கூற்று, அவரது பொருளாதாரத்தின் ஆன்மாவை வெளிப்படுத்துகிறது —

அவர் ஏற்றுமதியை நகர மையங்களில் மட்டுமல்ல, கிராமங்களின் கைகளிலும் வைக்க நினைத்தார்.

அவரது நோக்கம், `வெளி சந்தையில் நம் பொருட்கள் விற்கப்படட்டும்' என்பதல்ல; `வெளி சந்தையில் நம் பெயர் நிலைத்திருக்கட்டும்' என்பதே. ஏனெனில், வெளிநாட்டு சந்தையில் நாட்டின் பொருள் விற்கப்படும்போது, அது ஒரு பொருளின் வெற்றி மட்டுமல்ல; அது உழைப்பின் மதிப்பையும் திறனின் கையொப்பத்தையும் உலகத்துக்கு அறிமுகப்படுத்தும் தருணம்.

இவ்வாறு, C.O.M.P.E.T.E. என்பது ஒரு பொருளாதார வழிகாட்டி மட்டுமல்ல; இது, உலகமயமாக்கலை மனிதநேயத்தின் அறநெறியில் நங்கூரமிடும் ஒரு அரசியல் இலக்கணம். அது, சந்தைக்கான மந்திரமல்ல; அது, சமூகத்திற்கான வழிகாட்டி—நீதியும் நுட்பமும் இணையும் திராவிடத் தத்துவத்தின் நவீன வடிவம்.

**5 எதிர்காலத்தின் திசை: பாய்மரமும் புதிய புயல்களும்**

ஆக, முரசொலி மாறன் விட்டுச்சென்ற சிந்தனை மரபின் சாரத்தை, ஒரு ஒற்றை அரசியல் அறைகூவலாக நம்மால் தொகுக்க முடியும்: C.O.M.P.E.T.E. அதன் தத்துவம் இதுதான்:

**திறன், மனசாட்சியின் நங்கூரத்தில் பிணைக்கப்படும்போது மட்டுமே, அது ஒரு தேசத்தை உயர்த்தும் சக்தியாக மாறும்.**

இது வெறும் அலங்கார வார்த்தையல்ல; இதுவே, முரசொலி மாறன் என்ற ஆளுமையின் அரசியல் சாட்சியம். அவரது திறன்—சியாட்டில் மாநாட்டிற்கு முன் அவர் உருவாக்கிய தேசிய ஓர்மை, தோஹாவின் இறுக்கமான சூழலில் அவர் கையாண்ட தர்க்கபூர்வமான ராஜதந்திரம், ஷென்சென் நகரிலிருந்து அவர் கற்றுக்கொண்ட நிர்வாகப் பாடம். அவரது மனச்சாட்சி—பாங்காக்கில் அவர் பேசிய ஏழைகளின் அழுகுரல், காப்புரிமையைவிட மனித உயிரே மேலானது என்ற அவரது அறச் சீற்றம், "பச்சை அறை" சதிகளுக்கு எதிராக அவர் எழுப்பிய ஜனநாயகக் குரல்.

இந்த இரண்டும் இணைந்ததால்தான், அவரால் உலக அரங்கில் ஒரு புதிய தார்மீகத் திசையை வகுக்க முடிந்தது.

இந்த அறைகூவல், இன்று முன்பைவிட அவசியமாகிறது. ஏனெனில், நம்மைச் சுற்றும் காற்று மட்டுமல்ல, நாம் பயணிக்கும் கடலே மாறியிருக்கிறது.

செயற்கை நுண்ணறிவின் வருகை, வேலையின் இலக்கணத்தையே மாற்றியமைக்கிறது. காலநிலையின் சீற்றமும் பூகோள அரசியலும் பொருளாதாரத்தின் வரைபடத்தையே புதிதாக வரைகிறது. ஏற்றத்தாழ்வின் ஆழமான பிளவு, சமூகத்தின் ஆன்மாவையே காயப்படுத்துகிறது.

இந்த புதிய, கொந்தளிப்பான புயல்களுக்கு மத்தியில், வேகத்தை மட்டுமே நம்பும் பாய்மரம் திசைதவறும் என்பதை மாறன் நமக்கு உணர்த்துகிறார். வளர்ச்சியை வேகப்படுத்துவது மட்டுமே நமது வெற்றியல்ல; அந்த வளர்ச்சியை நியாயப்படுத்துவதே நம் காலத்திற்குத் தேவையான உண்மையான புதுமை.

ஆக, நம் காலத்தின் உண்மையான சவால், செயற்கை நுண்ணறிவை வரவேற்பது மட்டுமல்ல; அதை அறத்தின் கட்டுப்பாட்டில் வைப்பது. காலநிலையின் தாக்கத்தைக் குறைப்பது மட்டுமல்ல; அந்தச் சவாலையே நம் சமூகபொருளாதார உருமாற்றத்தின் விதையாக மாற்றுவது. போட்டியை ஊக்குவிப்பது மட்டுமல்ல; அந்தப் போட்டிக்களத்தை அனைவருக்கும் சமமானதாக அமைப்பது.

உலகத்தை எதிர்ப்பதல்ல நமது பணி; அதை நமது நிபந்தனைகளுடன், நமது அறத்தின் திசையோடு இணைப்பதே நமது ராஜதந்திரம். இதுவே, மாறன் காட்டிய வழி.

**அறிவும் அறமும் ஆற்றலும் இணைந்த திசையில்**
**பாய்மரம் மீண்டும் தொடுவானத்தைத் தொடட்டும்!**

---



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர திமுக சார்பில் நகர கழக மூத்த முன்னோடியும் 17 வது வார்டு முன்னாள் அவைத் தலைவருமான பி.கே.விஜயரங்கம் 100 வது ஆண்டு பிறந்த நாள் விழா நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பட்டு சால்வை மற்றும் தங்கசங்கிலி அணிவித்து வாழ்த்து தெரிவித்தார் உடன் ஆ.கிருஷ்ணசாமிஎம்.எல்.ஏ, கே.ஜெ. ரமேஷ், ம.ராஜி. ப.ச.கமலேஷ், காஞ்சனா சுதாகர், க.ஸ்ரீதர், மற்றும் நகர நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் கவுன்சிலர்கள் கழக மூத்த முன்னோடிகள் குடும்பத்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கும்மிடிப்பூண்டி

# பஜார் பகுதி தாமரை ஏரியில் கழிவுகள் அகற்றம்!

## டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ ஆய்வு!

திருவள்ளூர்,நவ.24–

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூ ண்டி தொகுதி கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் இருந்து வரும் கழிவுநீர் கும்மிடிப்பூண்டி பஜார் பகுதியில் உள்ள தாமரை குளத்தில் கலப்பதால் நீர் மாசுபாடு நிலத்தடி நீர் பாதிப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு போன்ற கடுமையான பிரச்சனைகள் ஏற்படுகிறது. இதனால் கும்மிடிப்பூண்டி வாழ் பொதுமக்களின் நலன் கருதி 18.11.2025 மற்றும் 19.11.2025 இரண்டு நாட்களாக அரசு துறை அதிகாரிகளிடம் முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் ஆகியோர் தாமரை ஏரியை ஆய்வு செய்து ஏரிகழிவுகளை அகற்றுவது குறித்தும் ஏரியில் தொழிற்சாலை கழிவுகள் கலக்காத வகையில் நடவடிக்கை எடுக்க அரசுத்துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினர். உடன் எஸ். ரமேஷ், மு.மணிபாலன், இரா.அறிவழகன், எம்.கேசவன் மு.பாஸ்கரன் அப்துல்கரீம் மு.இஸ்மாயில் பா.பரத்குமார் நரேந்திரன், பா.அறிவழகன், ப.சுரேஷ், அங்கமுத்து, ரெட்டம்பேடுசெந்தில், இஜாஸ்அகமது, கும்மிடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர் பாஸ்கரன் ஆகியோர் உடன் இருந்தனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், ஆரணி பேரூரில் எஸ். ஐ.ஆர். வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவுறுத்தலின்பேரில் 15 வட்டங்களிலும் பேரூர் செயலாளர் பி..முத்து, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.ரோஸ் பொன்னையன் ஆகியோரது முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. வழக்கறிஞர் ரமேஷ், ஜி.கரிகாலன், பி.எல்.ஏ.2 க்கள் உதயகுமார், ஈ.சாஜாவித், சாலேக், நீலகண்டன், டி.கோபிநாத், மகேந்திரன், டி ஜெயக்குமார், வழக்கறிஞர்கள் வி.சுரேந்தர், கே.கவியரசு, எஸ்.ஜெகனாதன், ஓவியர் பன்னீர்செல்வம், எம்.சுல்தான், ஐ.டி. சந்தோஷ், எஸ்.பி.உமாபதி, டி.பாஸ்கர், புதுநகர் பாலாஜி, எஸ்.நாகராஜ், டில்லி உள்ளிட்ட பி.எல்.ஓ.க்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் இருந்து வரும் கழிவுநீர் கும்மிடிப்பூண்டி பஜார் பகுதியில் உள்ள தாமரை குளத்தில் கலப்பதால் நீர் மாசுபாடு நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்பட்டுள்ளதையொட்டி டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

## தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள்

# தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திர மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம் இன்று (24.11.2025 திங்கட்கிழமை) காலை 11.00 மணி அளவில், **கோவை, விமானநிலையம் அருகில், காளப்பட்டி ரோடு, ஓட்டல் ஜோன் கனெக்டிவ்ல்** எனது தலைமையில்; தரையில் நடக்கும் தத்துவ நீரோட்டம், நினைத்ததை முடிக்கும் புயல்வேக செயல்திறன் கொண்ட கொங்கு மண்டல பொறுப்பாளர் **வி.செந்தில்பாலாஜி** அவர்கள் சிறப்புரையாற்றிட;

கோவை மாவட்டக் கழகச் செயலாளர்கள்/பொறுப்பாளர் தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், செந்தமிழ்செல்வன் மற்றும் மாநில வர்த்தகர் அணி நிர்வாகிகளான துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா.முருகவேல், பி.டி.பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என்.தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் துணைச் செயலாளர்கள் ஐ.கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே.பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் கோவை மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்கள் பி.மாரிசெல்வன், ஏ.கே. வேலுச்சாமி, கே.கே.கண்ணன் வரவேற்புரையாற்றிட நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. நவ.27–இளைஞர் எழுச்சி நாள் விழா
2.எஸ்.ஐ.ஆர் கவனப்படுத்துதல்
3. கழக ஆக்கப் பணிகள் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள்: 18.11.2025.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி